(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 53 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, திசெம்பர் 01, திங்கட்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0052/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) விஜயம் மேற்கொண்ட நாடுகளையும்,

(iii) பயணச் சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றுக்கான செலவுகளுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச் செலவை வெவ் வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) உடன் சென்ற நபர்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவர்களின் பெயர்களையும் அவர்களுக்காக ஏற்பட்ட செலவுகளை வெவ்வேறாகவும்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இதற்காக வரவு செலவுத்திட்டமிடப்பட்ட கொடுப்பனவினையும்,

(ii) அவ்வாறான பயணங்களிற்கு வழங்கப்பட்ட குறைநிரப்புச் செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0096/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு டிசெம்பரில் மேதகு சனாதிபதி அவர்கள் ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயத்திற்கான மொத்த செலவு எவ்வளவு என்பதையும்,

(ii) இவருடன் சென்ற நபர்களது எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) இதனால் நாட்டிற்கு கிடைத்த நன்மைகள் என்னவென்பதையும்,

(iv) அவர்களது பெயர்களையும் கிடைத்த பயனின் அளவு என்னவென்பதையும்,

(v) இற்றைவரை கிடைத்த பயன்களின் அளவையும்,

(vi) கிடைக்கவுள்ள நன்மைகளையும் அதற்கான திகதிகளையும்,

(vii) இப்பயன்கள் எந்தத்துறை சார்ந்தவை என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இதற்கு பிரதிபலனாக ஜப்பானுக்கு நாம் என்ன வழங்கினோம் என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0118 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1960 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பமாகி 2000 ஆம் ஆண்டு வரையிலும் 2000 ஆம் அண்டிலிருந்து இன்று வரையிலுமான தசாப்தங்களில் கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, பேராதனை, மொறட்டுவை, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக் கழகங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தர நிலைகள் என்ன என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு விரிவுரையாளர்களை பரஸ்பர அடிப்படையில் அவைகள் பெற்றுக்கொண்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆம் எனில், இறுதியாக விரிவுரையாளர் வருகை தந்த திகதியையும், கடந்த இரண்டு வருடங்களில், அவர்கள் வருகை தந்த பல்கலைக்கழகங்களின் பெயர்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) கடந்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒவ்வொரு பீடத்திற்கும், ஒவ்வொரு மாணவனுக்கும் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) விடுதி வசதிகள் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) இவை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறதா அல்லது அவர்கள் கட்டணம் செலுத்த வேண்டுமா என்பதையும்,

(iv) விடுதி வசதிகளை வழங்குவதற்கான தெரிவு நிபந்தனை என்னவென் பதையும்,

(v) விடுதி வசதிகள் அற்ற மாணவர்களுக்காக மேற்கொள்ளப்படும் மாற்று ஏற்பாடுகள் என்னவென்பதையும்,

(vi) சகல மாணவர்களும் தங்குவதற்கேற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட காலத்திட்டம் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) கடந்த 5 வருடங்களாக,

(i) இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அவர்களது நாடு மற்றும் அவர்களிடமிருந்து நாம் ஈட்டிய வருமானம் ஆகியவற்றையும் பல்கலைக்கழக அடிப்படையிலும் வருடாந்த அடிப்படை யிலும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0245 / '08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்வழங்கல் (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0269 / '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச இறைவரி, நிதி (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0270 / '08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தெழில் உறவுகள், மனிதவலு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் (அமைச்சரவை அந்தஸ்தற்ற) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங் கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0357/ ' 08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உடவெல குடியேற்ற உத்தியோகத்தர் பகுதியில் பரவன்தன ஒய உப தபால் அலுவலகம் அமைந்துள்ள அரச காணியின் ஒரு பகுதியில் அனுமதியின்றி தனிப்பட்ட ஒரு நபர் வேலியமைத்து அனுபவித்து வருகின்றார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பரவந்தன ஒய ஐக்கிய நலன்புரி மரண சகாய சங்கக் கூட்டமொன்றை அமைப்பதற்கு நீண்ட கால வரி உரிமமொன்றினால் இக்காணியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும்,

(ii) இவ்விடத்திற்கு இவ்வனுமதியற்ற அனுபவிப்பு தடையாகவுள்ளது என்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இக்காணியை, அனுமதியின்றி அனுபவிப்பவரை அகற்றி பரவந்தன ஒய ஐக்கிய நலன்புரி மரண சகாய சங்கத்திற்கு வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0645/ '08

8.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) முஸ்லிம் மக்களுக்கு தனிச்சிறப்புடையதான சுதேச மருத்துவ சிகிச்சை முறையான யுனானி மருத்துவர்கள் எத்தனை பேர் தற்போது (மாகாண சுகாதார சேவை அடங்கலாக) அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றி வருகிறார்கள் என்பதை சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளின் விபரங்களுடன் அவர் இச் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) ஆய்வொன்று மூலமாக இனங்காணப்பட்ட வகையில் தேவைப்படுகின்ற யுனானி மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 23 பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே முஸ்லிம் மக்கள் செறிவாக வசிப்பதாக இனங்காணப்பட்டுள்ளமையால் தேவைப்படுகின்ற யுனானி மருத்துவர்களின் எண்ணிக்கை 23 பேர்கள் என்பதையும்,

(ii) சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூவினங்களும் கிட்டத்தட்ட சமமாக வசிக்கின்ற ஒருசில பிரதேச செயலகங்களுக்காக ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மருத்துவர்கள் மூவர் தேவையென்பதையும்,

(iii) முஸ்லீம்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் ஒருசில பிரதேசங்களில் மருத்துவ நிலையங்களுக்குக்கூட (உதாரணமாக மட்டக்களப்பு) யுனானி மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லையென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) மருத்துவக் கல்லூரியிலிருந்து வருடந்தோறும் சித்தியடைகின்ற யுனானி மருத்துவர்களுக்குத் தொழில் வழங்கி முஸ்லிம் நோயாளிகளுக்கு அவசியமான சிகிச்சைகளை வழங்க எவ்வளவு காலப்பகுதிக்குள் நடவடிக்கை மேற்கொள்வா ரென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0767 / ‘08

9.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, பத்தேகம சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) பத்தேகம சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக்குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0768 / ’08

10.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, நெலுவ சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பிப்பாரா?

(ஆ) (i) நெலுவ சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0706 / '08

11.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமாகம – மாகம்மன மவுன்ட் க்ளிபட் தோட்டம் அரசுடைமை யாக்கப்பட்டது எப்போது,

(ii) அரசுடைமையாக்கப்பட்டபோது அக்காணியின் பரப்பு மற்றும் பெறுமதி யாது,

(iii) அரசுடைமையாக்கப்பட்ட பின்பு அதில் அமைக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாது,

(iv) வீடுகள் கட்டப்பட்ட பின்பு மீதியாகவுள்ள காணியின் பரப்பு எவ்வளவு,

(v) இக்காணியைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மீதியாகவுள்ள காணியில் பிரதான வீதிக்கு அருகில் பொது நடவடிக்கை களுக்காகவுகம் விளையாட்டு மைதானமாகவும் உபயோகிக்கப்படும் ஒரு பகுதியுள்ளதை அவர்அறிவாரா?

(இ) (i) விளையாட்டு மைதானமாக உபயோகிக்கப்படும் பகுதியில் மீதியாகவுள்ள 2 ஏக்கர் அளவிலான பகுதியை பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கித்தரும்படி ஹோமாகம பிரதேச சபையின் தீர்மானத்துடன் கோரப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) பல மக்கள் பிரதிநிதிகளினூடாகவும் இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(iii) பிரதேசவாசிகளும் பிரதேசத்தின் பொது அமைப்புக்களும் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அதன் பிரகாரம் பிரதேசத்தின் தேவையெனக்கருதி விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்வதற்கு இக்காணியை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0708/ '08

12.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலொன்னாவை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்னாலுள்ள ஒரு காணியில் நாட்டப்பட்டுள்ள அடிக்கல்லில், "1999 ஆவணி மாதம் 20 ஆம் திகதி கொலொன்னாவை கலாசார நகரத்தின் பொருட்டு அடிக்கல் நாட்டப்பட்டது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அன்றைய தினம் கலாசார நகரத்திற்கான ஆரம்ப விழாவொன்று நடைபெற்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அன்றைய தினம் விழாவில் பங்கேற்ற அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை அங்கத்தவர்கள் யார்,

(ii) மேற்படி விழா யாரால் ஒழுங்குசெய்யப்பட்டது,

(iii) குறித்த விழாவின் பொருட்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு,

(iv) அடிக்கல்லுடன் கூடிய பலகையை நிர்மாணிப்பதற்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கலாசார நகரத்தின் பொருட்டு இன்று வரை நடைபெற்றுள்ள வேலைகள் யாவை,

(ii) அடிக்கல் நாட்டப்பட்டதன் பின்னர் குறித்த வேலைத் திட்டத்தில் நிறை வேற்றப்படாத வேலைகள் யாவை,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0775 / ' 08

13.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2008.07.22 ஆம் திகதி, இரவு வேளையில், தெற்கு மற்றும் மேற்கு கடற் பரப்பில் ஏற்பட்ட சூறாவளி காரணமாகக் கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சூறாவளியின் விளைவாக மரணமடைந்த மற்றும் காணாமற் போன கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iii) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) மேற்படி வள்ளங்களின் உரிமையாளர்களினது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாதென்பதையும்,

(v) காணாமற்போனவர்களினதும் மரணமடைந்தவர்களினதும் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவையென்பதையும்.

(vi) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களையும் உபகரணங்களையும் திருத்துவதற்கு வழங்கப்பட்ட உதவிகள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0776 / ' 08

14.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான தெவிநுவர தெற்கு கிராம சேவையாளர் பிரிவில், கடலுக்கு மிகவும் சமீபமாக அமைக்கப்பட்டுள்ள "லயிட் ஹவுஸ்" ஹோட்டலின் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஹோட்டல் அமைக்கப்பட்ட போது கரையோரப் பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) கடற் கரையில் ஏதேனும் நிருமாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அதற்கான அனுமதிப்பத்திரத்தை எத்திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும்,

(ii) அதற்கமைவாக, மேற்படி நிருமாணப் பணிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அச்சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பொறுப்பினை வகித்தது யாரென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஈ) மேற்படி நிருமாணப் பணி சட்ட விரோதமானதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0777/ '08

15.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களின் எண்ணிக்கை மற்றும் மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஆ) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— தேர்தல் சீர்திருத்தங்கள் மீதான பாராளுமன்றத் தெரிகுழு,— 2006, ஏப்பிறல் மாதம் 04 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட தேர்தல் சீர்திருத்தங்கள் மீதான பாராளுமன்றத் தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை, 2008 யூன் மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கால எல்லையினை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2009, யூன் மாதம் 30 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— வேகமாக அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைப் பற்றி ஆராய்வதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— 2007 மே மாதம் 08 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட வேகமாக அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைப் பற்றி ஆராய்வதற்கான பாராளுமன்ற தெரிகுழு, தன்னால் செயற்படுத்தப்பட்ட விடயங்களை, 2008 யூன் மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லையினை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2009 யூன் மாதம் 30 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— மனிதரால் ஏற்படுத்தப்படும் பேரழிவுகளை விசாரணை செய்வதற்கும் அவற்றைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்குமான பாராளுமன்ற தெரிகுழு,— 2006 யூலை மாதம் 20 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட மனிதரால் ஏற்படுத்தப்படும் பேரழிவுகளை விசாரணை செய்வதற்கும் அவற்றைத் தடுப்பதற்கு மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்குமான பாராளுமன்ற தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை 2008 யூன் மாதம் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழு விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காலஎல்லையினை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2009 யூன் மாதம் 30 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — (ஒதுக்கப்பட்ட பதினெட்டாம் நாள்) - குழு ஆய்நிலையில் (பரிசீலனை நவெம்பர் 28 ஆம் திகதி).

*2.

போக்குவரத்து அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 306, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து ஐம்பது மில்லியன் (1,050,000,000ரூபா) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப் படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 306 | — | இலங்கை புகையிரதத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 186,000,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | 864,000,000 |
| | | மொத்தம் | 1,050,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, நவெம்பர் மாதம் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 8 வரையுள்ள மதிப்பீடு களின் மொத்தம் 27,039,980,332 ரூபா .

*3.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டத்தின் 48 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 06 ஆம் திகதிய 1552/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.11.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது. எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515—12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் 58,915 ரூபா சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து 58,915 ரூபா மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து

செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம்

தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உப தவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உப தவிசாளர்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ. டி.

குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

*13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*14.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*15.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*16.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*17.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*22.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*24.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*25.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*26.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*27.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*28.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*29.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*30.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*31.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

32.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ஸ்ரீ பாத கல்பவருசஷ்ஷ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

தாலியவக்க ஸ்ரீ ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

எக்சத் ஜன இசுறு பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

வண. மூனமலே தம்மரதன ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

உலக பௌத்த மகா சம்மேளனத்தின் இலங்கைப் பிரதேச நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்கள்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) எனும் சட்டமூலத்திற்கு குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிகளுக்கான அனுபந்தம்" என்னும் தனியிதழிற் காண்க.

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.